khfhzf; fy;tpj; jpizf;fsk;> tlkhfhzk; Provincial Department of Education, Northern Province

மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்

மூன்றாந் தவணைப் பரீட்சை - 2025

சைவநெறி Saivanerv	Grade 10	T	12	மூன்று மணித்தியாலம்

பகுதி - I

சரியான விடையின் கீழ்க் கோடிடுக

1. உலகில் உள்ள பொருள்கள் யாவற்றிலும் மேலான பொருளைக் குறிக்கும் தமிழ் பதம்.
   1. கடவுள் 2. பரம்பொருள் 3. இறைவன் 4. தெய்வம்
2. 'உயிர்களிடத்தில் அன்பு வைப்பவன் தெய்வநிலையை எய்திவிடுகிறான்' எனக் கூறியவர்.
   1. திருமூலர் 2. அருணகிரிநாதர் 3. ஆறுமுகநாவலர் 4. சேக்கிழார்
3. சோமவாரம் எனப்படுவது
   1. திங்கள் 2. செவ்வாய் 3. புதன் 4. வியாழன்
4. இறைசிந்தனையை வளர்க்கும் இடங்களாக அமைபவை
   1. மடங்கள், பாடசாலை, வைத்தியசாலை 2. வீடு, கல்வி நிறுவனம், மைதானம்
   3. வீடு, திணைக்களம், கோயில் 4. வீடு, பாடசாலை, ஆலயம்
5. ."யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி" என்று கூறும் நூல்
   1. திருவாசகம் 2. திருமந்திரம் 3. திருக்குறள் 4. திருப்புராணம்
6. இந்து மரபில் நிழல் கிரகங்களாக விளங்குபவை.
   1. ராகு, சந்திரன் 2. கேது, சூரியன் 3. ராகு, கேது 4. குரு, புதன்
7. சைவ சித்தார்ந்தம் கூறும் முப்பொருள்களும் எவை?
   1. ஆணவம், கன்மம், மாயை 2. சாத்வீகம், இராசதம், தாமதம்
   3. மனம், வாக்கு, காயம் 4. பதி, பசு, பாசம்
8. நாம் எக்காரியத்தையும தொடங்கும் போதும் இறை சிந்தனையுடன் ஆரம்பிக்க வேண்டும் என்பதை வலியுத்தும் கூற்று
   1. "ஒன்றே குலம் ஒருவனே தேவன்.."
   2. "நாமார்க்கும் குடியெல்லாம் நமனை அஞ்சோம்.."
   3. "அஞ்சுவது யாதொன்றுமில்லை.."
   4. "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.."
9. அமாவாசையை அடுத்து வரும் நான்காம் நாள் அழைக்கப்படும் முறை
   1. வளர்பிறை ஸப்தமி 2. தேய்பிறை ஸப்தமி 3. கிருஸ்ணபட்ச சதுர்த்தி 4. சுக்கிலபட்ச சதுர்த்தி
10. சைவநெறியில் மிக மேலானதாக மதிக்கப்படுவது
   1.அன்பு 2.துறவு 3.வாய்மை 4.அறிவு
11. ஆன்மாக்களுக்கு அருள் புரியும் பொருட்டு இறைவன் குணங்குறிகளோடு கூடிய நிலை
   1. சொரூபநிலை 2. தடத்தநிலை 3. முத்திநிலை 4. கடந்தநிலை
12. "பாரிடை ஐந்தாய் பரந்தாய் போற்றி" என இறைவனின் சிறப்பைப் பாடியவர்
   1. திருநாவுக்கரசர் 2. சுந்தரர் 3. மாணிக்கவாசர் 4. யோகர் சுவாமி

Past Papers Wiki

13. 'ஸ்ரீசத்தியபாமா ருக்மணி சமேத பார்த்தசாரதி' கோயிலாக மாற்றம் பெற்ற குலதெய்வ கோயில்
1. மாரியம்மன் 2. பிடரியம்மன் 3. திரௌபதையம்மன் 4. கண்ணகியம்மன்

14. நரக சதுர்த்தசி என அழைக்கப்படும் பண்டிகை
1. தைப்பொங்கல் 2. சித்திரைப் புத்தாண்டு 3. தீபாவளி 4. ஓணம் பண்டிகை

15. 'தண்ணளி வெண்குடை வேந்தன்' என அழைக்கப்படுபவர்
1. விஜயாலயசோழன் 2. மனுநீதிகண்ட சோழன் 3. வித்தியாரம்பம் 4. சபிண்டீகரணம்

16. திருமுறைகளைத் தொகுத்தவர்?
1. இராஜஇராஜசோழன் 2. குலோத்துங்கசோழன் 3. நம்பியாண்டார்நம்பி 4. கரிகாலன்

17. சைவசமயத்தின் சின்னமாக போற்றப்படுவது
1. சேவல் 2. நந்தி 3. நடராஜர் 4. வேல்

18. மிருகேந்திரம் முதல் விசிவான்மிகம் வரையிலான உபாகமங்களிதும் எண்ணிக்கை
1. 210 2. 205 3. 207 4. 200

19."அன்பின் வழியது உயிர்நிலை" என்று கூறியவர்?
1. திருநாவுக்கரசர் 2. திருவள்ளுவர் 3. திருமூலர் 4. ஔவையார்

20. அருணந்தி சிவாசாரியார் முத்தியடைந்த தினம்
1. சித்திரைச் சதயம் 2. வைகாசி மூலம் 3. புரட்டாதி பூரம் 4. ஆடிப்பூரம்

21. திருஞானசம்பந்தருக்கு பொற்தாளம் கிடைக்கப் பெற்ற தலம்
1. சிதம்பரம் 2. சீர்காழி 3. திருக்கோலக்கா 4. திருத்தருமபுரம்

22. இலங்கையை சிவபூமி என அழைத்துச் சிறப்பித்தவர்
1. அருணகிரிநாதர் 2. ஞானபிரகாசர் 3. திருஞானசம்பந்தர் 4. திருமூலர்

24. தாமரை மலர் மீது வாழும் இந்திரன், பிரம்மன் முதலான தேவர்கள் நிறைந்திருக்கும் மண்டபம்
1. மகா மண்டபம் 2. அர்த்தநாரீஸ்வரர் மண்டபம்
3. திருச்சிற்றம்பல மேடை 4. தேவாசிரியன் மண்டபம்

25. வாய்மையின் சிறப்பு பற்றி எடுத்து விளக்கும் உபநிடத மகாவாக்கியம்
1. ஏகம்சத் 2. சதயம்வத 3. வாய்மையேவெற்றி 4. உண்மைபேசு

26. தோத்திர நூலாகவும் சாத்திர நூலாகவும் விளங்கும் நூல்
1. திருக்குறள் 2. திருமந்திரம் 3. சிவஞானபோதம் 4. திருவருட்பயன்

27. இருளிலும் கொடிய மலம் என்று கூறப்படுவது,
1. மாயாமலம் 2. ஆணவமலம் 3. கன்மமலம் 4. ஆகாமியமலம்

28. சுவாமி விபுலாந்தர் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் அதிபர் பொறுப்பை ஏற்றுக் கொண்ட ஆண்டு
1. 1982 2. 1915 3. 1920 4. 1942

29. அறிவித்தாலும் அறியாமாட்டாத பொருள்
1. பதி 2. பசு 3. பாசம் 4. உயிர்கள்

30. தாயாரை இழந்தவர்கள் விசேடமாக அனுட்டிக்கும் திதி விரதம்
1. ஆடிஅமவாசை 2. சித்திரைபூரணை 3. தைஅமவாசை 4. ஏகாதசிவிரதம்

31. பிள்ளையார் கதையினை அருளியவர்
1. பண்டிதமணி 2. விபுலானந்தர் 3. வரதபண்டிதர் 4. ஆறுமுகநாவலர்

Past Papers Wiki

32. சைவசமயத்தவரது இறுதி நோக்கம்

1. மகிழ்ச்சியாக இருத்தல் 2. ஆலயங்களை அமைத்தல்
3. பணம்சம்பாதித்தல் 4. முத்தியடைதல்

33. திருஞானசம்பந்தர் "மடையில் வாளை....." என்னும் பதிகத்தைப் பாடிய போது நிகழ்ந்த அற்புதம்.

1. ஐந்தெழுத்துப் பொறித்த பொற்றாளம் கிடைத்தமை 2. முதலை உண்ட சிறுவன் மீண்டமை
3. பாண்டிய மன்னனின் வெப்பு நோய் நீங்கியமை 4. கல் தெப்பமாக மிதந்தை

34. திருச்சூகர வேட்டை இடம் பெறும் ஆலயம்

1. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம் 2. ஓட்டிசுட்டான் தான்தோன்றீச்சரம்
3. நயினாதீவு நாகபூசணி அம்மன் 4. புன்னைச்சோலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன்

35. "பாலுக்குப் பாலகன் வேண்டி....." எனும் பாடல் பாடப்பட்ட தலம்

1. கோயில் 2. திருவீழிமிழலை 3. திருக்குழமலம் 4. சீர்காழி

36. அருள் வடிவான சக்தி, அறிவு மயமான சிவத்தோடு கலந்து பிரபஞ்சத்தை இயங்க வைப்பதை குறிக்கும் திருவிழா

1. கொடியேற்றம் 2. வாகனத் திருவிழா 3. தீர்த்தம் 4. திருக்கல்யாணம்

37. நடராஜ திருக்கோலத்தின் சிறப்பினை வியந்து போற்றுகின்ற திருமுறைப்பாடலின் முதலடி

1. அங்கமும் வேதமும் ஓதும் நாவர்.... 2. அந்தநாளன் உன் அடைக்கலம் புகுத.....
3. உற்றுமை சேர்வது மெய்யினையே..... 4. குனித்த புருவமும் கொவ்வைச் ...

பின்வரும் அட்டவணையில் A இலிருந்து I வரையில் தரப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 38 தொடக்கம் 40 வரையான ஒவ்வொரு வினாவுக்குமான விடையைத் தெரிவு செய்க.

சைவம் வளர்த்த குரவர்கள்	வாழ்வியல் சம்பவம்	நூல்கள்
A மெய்கண்ட தேவர்	D பூட்டப்பட்டிருந்த திருமறைக்காட்டு திருத்தலத்தை திறக்க பாடியமை	G திருக்கோவையார்
B மாணிக்கவாசகர்	E திருவெண்ணெய் நல்லூரில் முத்தியடைந்தமை	H திருத்தாண்டகம்
C திருநாவுக்கரசர்	F பாண்டிய மன்னன் அளித்த பொற்காசுகளை சிவனடியார்களது பசி போக்கப் பயன்படுத்தியமை	I சிவஞானபோதம்

38. சைவசித்தாந்தம் சார்பான முப்பொருளுண்மையை முதன்முதலாக நிறுவியவரோடு தொடர்புடைய தொகுதி,

1. ADH 2. AEI 3. BDH 4. BEI

39. "என் கடன் பணி செய்து கிடப்பதே" எனக் கூறியவரோடு தொடர்புடைய தொகுதி,

1. ADI 2. AEH 3. CDH 4. CEG

40. திருவாசகம் பாடியவரோடு தொடர்புடைய தொகுதி

1. BDG 2. BFG 3. CEI 4. CFG

(40×1=40 புள்ளிகள்)

பகுதி – II

முதலாம் இரண்டாம் வினா உட்பட எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடைதருக

1) சுருக்கமான விடை தருக.

1 இறைவனின் எண்குணங்கள் 4 தருக
2 "அன்பே சிவம்" என்பதன் விளக்கம் யாது
3 கன்னிகாதானம் என்றால் என்ன
4 "கிராம சாந்தி" என்றால் என்ன
5 பெரியபுராணத்தின் காப்புச் செய்யுள்ளை குறிப்பிடுக
6 கிராமியத் தெய்வ வழிபாட்டுடன் தொடர்புடைய கலைகள் நான்கு எழுதுக
7 இலங்கையில் மிக உயரமான கொடிக்கம்பத்தை கொண்ட ஆலயம்
8 இலிங்க வழிபாடு செய்து வீடுபேறடைந்த நாயன்மார்கள் நால்வரைக் குறிப்பிடுக
9 வைரவர் "சேத்திரபாலகர்" என அழைக்கப்படுவதன் காரணம்
10 இரதோற்சவம், சூர்ணோற்சவம் முதலிய உணர்த்தும் இறைவனது தொழில்

(2x10=20 புள்ளிகள்)

2) **பின்வரும் தேவாரங்களில் இரண்டினை வரிக்கிரமமாக எழுதி அவற்றின் பொழிப்புரையும் தருக.**

1. "உற்றுமை சேர்வது...."
2. "தந்தது உன்தன்னை..."
3. "தண்ணளி வெண்குடை....."
4. "அந்தணாளன் உன்...."
5. "பாலுக்கு பாலகன்..."

(3+2x2=10 புள்ளிகள்)

3) **"திருநாவுக்கரசர் சமணசமயம் சார்ந்து பின் சைவத்துக்கு மீண்டார்"**

1. திருநாவுக்கரசு நாயனார் "உழவாரப் படையாளி" என அடைக்கப்பட காரணம் யாது
2. திருநாவுக்கரசு நாயனாரின் நின்றநெறி, முத்தி, குருபூசைத்தினம், ஆகிய விபரரங்களைக் குறிப்பிடுக
3. திருநாவுக்கரசு நாயனாரின் அற்புதங்களில் மூன்றினைக் குறிப்பிட்டு ஒன்றினை விளக்குக

(2+3+5=10 புள்ளிகள்)

4) **"பஞ்சாங்கம் வாழ்வியலோடு இணைந்ததாகும்"**

1. பஞ்சாங்கம் முதன் முதலில் எக்காலத்தில் யாரால் கணிக்கப்பட்டது
2. பஞ்சாங்கத்தின் மூன்று வகைளையும் குறிப்பிடுக
3. பஞ்சாங்கம் பற்றி சுருக்கமாக விளக்குக

(2+3+5=10 புள்ளிகள்)

5) ***"பண்டிகைகள் மனிதனுடைய வாழ்வை மேன்மைடைய செய்கின்றன"***

1. *தீபாவளி என்பதன் பொருள் யாது*
2. *பண்டிகைகள் கொண்டாடுவதனால் ஏற்படும் நன்மைகள் மூன்றினைக் குறிப்பிடுக*
3. *தீபாவளிப் பண்டிகை பற்றிச் சுருக்கமாக விளக்குக*

(2+3+5=10 புள்ளிகள்)

6) ***இலங்கையில் சைவமும் தமிழும் தழைக்கப் பணியாற்றிய ஈழத்துச் சான்றோர்களுள் சுவாமி விபுலானந்தர் குறிப்பிடத்தக்கவர்.***

1. *சுவாமி விபுலானந்தர் இசைக்கலை சார்ந்தும் நாடகத்துறை சார்ந்தும் எழுதிய நூல்கள் யாவை?*
2. *விபுலானந்தர் ஆசிரியராகத் திகழ்ந்த சஞ்சிகைகள் யாவை*
3. *விபுலானந்தரின் சமூகப்பணிகள் மூன்றினை சுருக்கமாக விளக்குக.*

(2+3+5=10 புள்ளிகள்)

8) **பின்வருவனவற்றில் எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.**

1. சைவவித்தியா விருத்திச் சங்கம்
2. கந்தசஷ்டி
3. வேதங்கள்
4. விழுமியங்கள்

(5×2=10 புள்ளிகள்)

PAST PAPERS WiKi
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library